بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *10/04/2026* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கை வரலாற்றின் ஒளியில் இறை ஏகத்துவம் குறித்த ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்புகள்

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றி, இறை ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் குறித்தும், அன்னாரின் நடைமுறை முன்மாதிரி குறித்தும், தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு அன்னார் வழங்கிய அறிவுரைகள் குறித்தும், எவ்விதம் அவர்களுக்குத் தர்பிய்யத் வழங்கினார்கள் என்பது குறித்தும் சில சம்பவங்களை எடுத்துரைப்பேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுவார்கள்:** ஒருவருடைய மகன் இறந்துவிட்டான். அவரது நண்பர் ஒருவர் துக்கம் விசாரிப்பதற்காக அவரிடம் சென்றபோது அவர் கூக்குரலிட்டு அழுததுடன், இறைவன் எனக்குப் பெரிய அநீதி இழைத்துவிட்டான் என்று கூறினார். அதாவது, அவரது பார்வையில் அவருக்குச் சேர வேண்டிய ஏதோ ஓர் உரிமையை இறைவன் பறித்துக்கொண்டதாக அவர் நினைத்தார். ஆனால், ஓர் அடியான் இறைவன் மீது நிலைநாட்டியுள்ள உரிமைதான் என்ன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்?"

நமக்குக் கிடைத்துள்ள ஒவ்வோர் அருட்கொடைகளும், சந்ததிகளும் அல்லாஹ்வின் அருளாலேயே கிடைத்துள்ளன என்பதை மனிதன் ஒவ்வொரு கணமும் நினைவில் கொள்ள வேண்டும். நாம் எப்போதும் அல்லாஹ்வுக்கு முன் குனிந்தவாறு இருக்க வேண்டும் என்றும், நமது ஒவ்வொரு சொல்லும் செயலும் இறை ஏகத்துவத்தை வெளிப்படுத்த வேண்டும் என்றும், நம்மிடம் சிறிதளவும் இணைவைப்பின் சாயல் ஏற்பட்டுவிடக் கூடாது என்றும் இந்த நிலை நம்மிடம் எதிர்பார்க்கிறது. அல்லாஹ்விடம் நமக்கு ஏதோ உரிமை இருப்பதாக ஒருபோதும் கருதக்கூடாது. ஏதோ சிறிதளவு நாம் இறைவணக்கம் செய்வதால் நமக்கு ஏதோ உரிமை கிடைத்துவிட்டதாக கருதக்கூடாது. மாறாக, அந்த இறை வணக்கங்களை நாம் நமது சொந்த பயனுக்காகவே செய்கிறோம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது மகன் மிர்ஸா முபாரக் அஹ்மத் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார்கள். அவரது நோய்வாய்ப்பட்ட காலத்தில் அன்னார் செய்த பணிவிடைகளைக் கண்டு, ஒருவேளை முபாரக் அஹ்மத் இறந்துவிட்டால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மிகுந்த துயரத்திற்கு ஆளாவார்கள் என்று ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூட நினைத்தார்கள். ஆனால், முபாரக் அஹ்மத் இறந்தபோது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மிகுந்த பொறுமையுடன் அப்போதே தமது நண்பர்களுக்குக் கடிதம் எழுதத் தொடங்கினார்கள். அதில், 'முபாரக் அஹ்மத் இறந்துவிட்டார். ஆனால், இதற்காக நாம் பதற்றமடையக் கூடாது. இது அல்லாஹ்வின் நாட்டமாகும். இதற்கு நாம் பொறுமை காக்க வேண்டும்' என்று குறிப்பிட்டார்கள். பின்னர் வெளியே வந்து புன்னகைத்த முகத்துடன், முபாரக் அஹ்மத்

குறித்து அல்லாஹ் வழங்கிய இல்ஹாம் நிறைவேறிவிட்டது என்று உரையாற்றினார்கள். **அன்னாரின் கவிதை வரி இவ்வாறு உள்ளது**:

"அனைவரையும் விட அழைப்பவன் (அதாவது, அல்லாஹ்) மிகவும் அன்பானவன்;
உள்ளமே! அவனுக்காகவே உயிரைத் தியாகம் செய்."

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: "சுல்தான் அப்துல் ஹமீத் கான் உடைய பல விஷயங்கள் தவறாக இருந்தன. ஆனால் அவரிடமிருந்த ஒரு விஷயம் மிகவும் பிடித்திருந்தது. போரைத் தவிர்ப்பதற்காக அமைச்சர்கள் பல்வேறு பலவீனங்களையும் சிரமங்களையும் எடுத்துரைத்தபோது, 'சில விஷயங்களை அல்லாஹ்வின் மீதும் விட்டுவிட வேண்டும்' என்று சுல்தான் கூறினார்."

இந்தச் சம்பவத்தின் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் மீது வைக்க வேண்டிய முழுமையான நம்பிக்கையின் முக்கியத்துவத்தை (எடுத்துரைத்தவாறு) பாராட்டியிருந்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களுக்குத் தலைவலி மற்றும் தலைச்சுற்றல் பாதிப்பு இருந்தது. ஒரு மருத்துவர் இதைக் குணப்படுத்துவதில் கைதேர்ந்தவர் எனக் கேள்விப்பட்டு அவர் வரவழைக்கப்பட்டார். அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களைக் கண்டபோது, இரண்டு நாட்களில் நான் உங்களைக் குணப்படுத்திவிடுவேன் என்று கூறினார். இதைக் கேட்டவுடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் உள்ளே சென்று, ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் (ரலி) அவர்களுக்கு ஒரு சீட்டு எழுதி அதில், "இந்த நபரிடம் நான் ஒருபோதும் சிகிச்சை பெற விரும்பவில்லை; இவர் இறைவன் என்று வாதிடுகிறாரா என்ன?" என்று குறிப்பிட்டார்கள். அவர் திரும்பிச் செல்வதற்கு தேவையான பயணச் செலவுடன் மேலதிகமாக 25 ரூபாயும் வழங்கி அவரை அனுப்பிவிடுமாறு அன்னார் கூறினார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுவார்கள்**: "எவர்கள் அல்லாஹ்வின் மகத்துவத்திற்காகவும் கண்ணியத்திற்காகவும் உள்ளத்தில் உத்வேகம் கொண்டுள்ளார்களோ, அவர்களை அல்லாஹ் நேசிக்கிறான். இத்தகைய மக்கள் மிக நுட்பமான பாதையில் செல்கிறார்கள்; அல்லாஹ்வுக்காக உத்வேகம் இல்லாதவரை எவரும் அவர்களுடன் சேர்ந்து பயணிக்க முடியாது. அல்லாஹ்வுக்காக மனிதனது உள்ளத்தில் தனிப்பட்ட உத்வேகம் பிறக்காதவரை மனிதனுக்கு எந்த இன்பமும் கிடைக்காது. தனது நஃப்ஸின் கலப்படத்திலிருந்தும் உலகாதாய பயன்கள், இலாபங்களின் எண்ணங்களிலிருந்தும் மனிதன் விடுபடாதவரை அவனது எந்த இறைவணக்கமும் தர்மமும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை."

எனவே, துஆக்கள் ஒப்புக்கொள்ளப்படுவதற்கு ஏகத்துவத்தின் மீது முழுமையான உறுதியும் நம்பிக்கையும் கொண்டிருப்பது அவசியமாகும். மேலும், அல்லாஹ்விடமிருந்து அவனது அன்பைப் பெறுவதற்காக துஆவே அனைத்திற்கும் முதலாவதாக இருக்க வேண்டும். 'நாங்கள் நிறைய துஆ செய்தோம்; நாங்கள் இதைச் செய்தோம், அதைச் செய்தோம்; நஃபில் தொழுதோம்; சதகா கொடுத்தோம்; ஆனால், எங்களது துஆக்கள் ஒப்புக்கொள்ளப்படவில்லை' என்று எழுதுபவர்கள் இந்த விஷயத்தைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கற்றுத் தந்த வழிமுறையாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களை நோக்கி அல்லாஹ் இவ்வாறு கூறினான்**: இந்தக் காலகட்டத்தில் நீர் எனது ஏகத்துவத்தின் கொடியை ஏந்தியவராகவும், உலகில் தொலைந்துபோன ஏகத்துவத்தின் கருவூலத்தை மீண்டும் நிலைநாட்டுபவராகவும் இருப்பதால், முஹம்மதிய மஸீஹே! எனது ஏகத்துவமும் தனித்துவமும் எனக்கு எவ்வளவு பிரியமானதோ அதே போன்று நீயும் எனக்குப் பிரியமானவர் ஆவீர். கிறிஸ்தவர்கள் பொய்யாகவும் இட்டுக்கட்டியும் தங்களது மஸீஹை இறைவனின் உண்மையான மகனாக ஆக்கி வைத்துள்ளார்கள். ஆகவே, ஒரு பிள்ளைக்கு உரிய உரிமையைப் போன்று உம்மிடம் நான்

அன்பு செலுத்த வேண்டும் என எனது தன்மானம் எதிர்பார்க்கிறது. இதன் மூலம் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சீடர்கள் கூட 'அத்ஃபாலுல்லாஹ்' (அல்லாஹ்வின் பிள்ளைகள்) எனும் நிலையை அடைய முடியும் என்பது உலகிற்கு வெளிப்படும்."

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: "ஐரோப்பாவாக இருந்தாலும் சரி, ஆசியாவாக இருந்தாலும் சரி, பூமியின் பல்வேறு பகுதிகளில் வாழும் நல்லியல்பு கொண்ட அனைத்து ஆன்மாக்களையும் ஏகத்துவத்தின் பக்கம் இழுத்து, தனது அடியார்களை ஒரே மார்க்கத்தின் கீழ் இணைக்கவே அல்லாஹ் நாடுகிறான். இதுவே இறைவனது நோக்கம் ஆகும். இதற்காகவே நான் உலகிற்கு அனுப்பப்பட்டுள்ளேன். எனவே, நீங்கள் மென்மை, நற்பண்புகள் மற்றும் துஆக்களுக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம் இந்த நோக்கத்தைப் பின்பற்றுங்கள்."

**அன்னார் மேலும் கூறுகிறார்கள்:** "அல்லாஹ்வின் ஏகத்துவமும், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கண்ணியமும் உலகில் நிலைபெற வேண்டும் என்பதே எனது முழுமையான மகிழ்ச்சியும், எனது வருகையின் உண்மையான நோக்கமும் ஆகும்."

**ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் கூறினார்கள்**: "எனது பைஅத்தின் உண்மையான நோக்கமே இறைவனின் ஏகத்துவமும், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கண்ணியமும் உலகில் நிலைபெற வேண்டும் என்பதுதான்."

காதியானில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு 'பீரா(ன்) தத்தா' என்ற பெயரில் ஒரு பணியாளர் இருந்தார். அனைவரும் அவரை அந்தப் பெயரிலேயே அழைத்தனர். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அவரை அழைக்கும்போது 'பீரி தத்தா' என்று அழைப்பார்கள். அதாவது, "எனது பீர் (அதாவது, எனது வழிகாட்டியாகிய) அல்லாஹ்வினால் வழங்கப்பட்டவர்" என்பது அதன் பொருளாகும்.

அல்லாஹ், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு இல்ஹாம் மூலமாக,

خُذُوا التَّوْحِيدَ التَّوْحِيدَ يَا أَبْنَاءَ الْفَارِسَ

என்று கூறினான். (அதாவது, "பாரசீகத்தின் புதல்வர்களே! ஏகத்துவத்தை இறுகப் பற்றிக் கொள்ளுங்கள்; ஏகத்துவத்தை இறுகப் பற்றிக் கொள்ளுங்கள்.") இந்த இல்ஹாம் நம்முடைய நிலைத்தன்மைக்கும் வளர்ச்சிக்கும் உரியதாகும்; இது அன்னாரின் சந்ததியினருக்கும், அன்னாரை ஒப்புக்கொண்ட ஒவ்வொருவருக்கும் உரியதாகும். நீங்கள் அன்னாரின் பைஅத்தில் இணைந்துவிட்டபோது, அன்னாரின் (ஆன்மிகப்) பிள்ளைகளாகவும் சந்ததியினராகவும் ஆகிவிட்டீர்கள். இதனை நீங்கள் உறுதியாகப் பற்றிக்கொண்டால் இம்மையிலும் மறுமையிலும் வெற்றி கிடைக்கும்; இல்லையெனில், எந்தவோர் இரத்த உறவோ அல்லது பைஅத்தோ எவ்விதப் பயனும் அளிக்காது. அல்லாஹ்விற்கு இணையாக ஒரு மனிதனுக்கு மதிப்பளிக்கப்படுவதை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கடுமையாக வெறுத்தார்கள். எனவே, தம்மை பின்பற்றுபவர்களும், சந்திக்க வருபவர்களும் கை குலுக்க வரும்போது தமது பாதங்களைத் தொடுவதை அன்னார் பலமுறை கடுமையாகத் தடுத்துள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: "யாராவது எனது புகைப்படத்தை எடுத்து, அதனை உருவ வழிபாட்டாளர்களைப் போலத் தன்னிடம் வைத்துக் கொள்வதையோ அல்லது அதனை வெளியிடுவதையோ நான் கடுமையாக எதிர்க்கிறேன். எவரும் அவ்வாறு செய்ய வேண்டும் என்று நான் ஒருபோதும் கட்டளையிடவில்லை. உருவ வழிபாட்டிற்கும், புகைப்பட வழிபாட்டிற்கும் என்னைவிடப் பெரிய எதிரி எவரும் இருக்க முடியாது. ஆனால், இன்றைய காலத்தில் ஐரோப்பிய மக்கள் ஒருவருடைய நூல்களைப் படிக்க விரும்பினால், முதலில் அவரது புகைப்படத்தைப் பார்க்கவே விரும்புகிறார்கள் என்பதை நான் கண்டேன். ஏனெனில், ஐரோப்பிய நாடுகளில், முகத்தைப் பார்த்து ஒருவரை அடையாளம் கண்டு கொள்ளும் அறிவு அதிக வளர்ச்சி பெற்றுள்ளது. அவர்களில் பெரும்பாலார் ஒருவரது முகத்தைப் பார்த்தே, வாதிக்கக்கூடியவர் உண்மையாளரா அல்லது

பொய்யரா என்பதை அடையாளம் கண்டுவிடுவார்கள். ஆயிரக்கணக்கான மைல் தூரத்தில் இருப்பதால் அவர்களால் என்னிடம் வர முடியாது; எனது முகத்தையும் (நேரடியாகப்) பார்க்க முடியாது. எனவே, அந்த நாட்டின் அகப்பார்வை கொண்டவர்கள் எனது புகைப்படத்தின் மூலமாக எனது உள்ளத்தின் நிலைகளை ஆராய்கிறார்கள். ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிலிருந்து எனக்குக் கடிதம் எழுதிய பல நபர்கள், 'நாங்கள் உங்களது புகைப்படத்தை உன்னிப்பாகக் கவனித்தோம்; முகம் பார்த்து அடையாளம் கண்டு கொள்ளும் அறிவின் படி, இந்தப் புகைப்படத்திற்கு உரியவர் ஒருபோதும் பொய்யராக இருக்க முடியாது என்பதை நாங்கள் ஏற்க வேண்டியதாயிற்று' என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு பெண்மணி எனது புகைப்படத்தைப் பார்த்துவிட்டு, 'இது இயேசுவின் புகைப்படம்' என்று கூறினார். எனவே, இந்த நோக்கத்திற்காகவும், இந்த எல்லை வரையிலும் இம்முறையைப் பின்பற்றுவதில் ஒரு நலன் கருதி நான் மௌனம் காக்கிறேன். புகைப்படங்கள் மற்றும் சித்திரங்கள் மூலம் அறிவியல் துறையில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது; விலங்குகள் மற்றும் நோய்களை அடையாளம் காண இது உதவுகிறது. எனவே, இவற்றை ஹராம் (தடுக்கப்பட்டது) என்று கூறுவது சரியல்ல. ஷிர்க் அல்லது வீணான காரியங்களுக்கு இட்டுச்செல்லும் செயல்களை மட்டுமே இஸ்லாம் தடுக்கிறது; அறிவிற்கும், பயனுக்கும் வழிமுறையாக விளங்கும் விஷயங்களை அல்ல. எனினும், புகைப்படங்கள் ஒரு நல்ல நோக்கத்திற்காக இருக்க வேண்டும்; அதனை வாழ்வாதாரமாகவோ அல்லது நோக்கமற்ற விளம்பரமாகவோ மாற்றக்கூடாது என்பதே நிபந்தனையாகும். ஏனெனில், இவ்வாறாக மெல்ல மெல்ல பித்அத்துகளும் ஷிர்க்கும் உருவாகக்கூடும். எனவே, எச்சரிக்கையும் நிதானமும் அவசியமாகும். إِنَّمَا الْأَعْمَالُ بِالنِّيَّاتِ (நிச்சயமாகச் செயல்கள் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின்றன)"

இத்தகைய பித்அத்துகள் நம் மக்களிடையேயும் ஆரம்பமாகி வருகின்றன. சிலர் தங்களது மறைந்த முன்னோர்களின் புகைப்படங்களைத் தங்களோடு வைத்துக் கொள்கிறார்கள். இன்னும் சிலர், திருமண வைபவங்களில் தங்களது முன்னோர்களின் புகைப்படங்களைப் பெரிய அளவில் ஃபிரேம் செய்து மாட்டி வைத்துவிட்டு, 'இவர்கள் எங்களது முன்னோர்கள்; அவர்களும் எங்களுடன் இந்த நிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர்' என்று கூறுகிறார்கள். இவை அனைத்தும் ஷிர்க் ஆகும்; பித்அத்துகளாகும். இதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும். நல்ல நோக்கத்திற்காகவும், நினைவாகவும் ஆல்பங்களில் புகைப்படங்களை வைத்திருப்பது அனுமதிக்கப்பட்டதே. ஆனால், அதையே ஒரு வழக்கமாக ஆக்கிக் கொண்டு, ஒவ்வொரு நாள் காலையிலும் எழுந்து அந்தப் புகைப்படங்களைப் பார்ப்பதும், அதற்கு ஸலாம் கூறுவதும் பித்அத் ஆகும்."

**ஹஸ்ரத் மவ்லானா குலாம் ரஸூல் ராஜீகி சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: "இது 1901 ஆம் ஆண்டு நடந்த நிகழ்வாகும். நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் முன்னிலையில் அமர்ந்திருந்தேன். ஹுஸூர் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் ஏகத்துவம் குறித்து ஒரு சொற்பொழிவு ஆற்றினார்கள். அதில், சிலர் மற்றவர்களின் உதவியைப் பெறும்போது, 'அல்ஹம்துலில்லாஹ்' என்று கூறாமலேயே 'ஜஸாக்கல்லாஹ்' என்று கூறிவிடுகிறார்கள். ஆனால், இதனை ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால், இதில் ஒரு வகை ஷிர்க் மறைந்திருப்பதைக் காணலாம். ஏனெனில், உபகாரம் செய்பவன் அல்லாஹ் ஆவான். எனவே, முதலில் அல்லாஹ்வின் பெருமையையும் புகழையும் எடுத்துரைத்துவிட்டு, பிறகு உதவி செய்தவருக்கு 'ஜஸாக்கல்லாஹ்' என்று கூறுவது அவசியமாகும் என்று கூறினார்கள்."

**ஹஸ்ரத் பாயி அப்துர் ரஹ்மான் சாஹிப் காதியானி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் இறுதி பயணமான லாகூர் பயணத்தின் விவரங்கள் அடங்கிய கட்டுரையில் பின்வருமாறு எழுதுகிறார்கள்**: "மரணத்திற்குச் சில நாட்களுக்கு முன்னால், ஹஸ்ரத் (மஸீஹ் மவ்ஊத் அலை...,) அவர்களைக் காண்பதற்காகப் பெண்கள் சிலர் வந்திருந்தார்கள். ஹுஸூர் அவர்கள் மிகவும் வேலையாக இருந்ததால் அவர்களை விரைவில் அனுப்பி வைக்க விரும்பினார்கள். ஆனால் அவர்கள் ஏதேனும் ஓர் அறிவுரை

வழங்குமாறு வேண்டிக்கொண்டார்கள். அன்னார் தனது மிகுந்த பணிச் சுமைக்கு மத்தியிலும் அவர்களது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, ஏகத்துவத்தை கடைப்பிடிக்குமாறு போதித்தார்கள். மேலும், உருவ வழிபாட்டைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தினார்கள்."

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மற்றொரு சொற்பொழிவில்**,

"ஈஸா மஸீஹை மரணிக்க விடுங்கள்; அதில்தான் இஸ்லாத்தின் வாழ்வு உள்ளது.

முஹம்மதிய மஸீஹை வரவிடுங்கள்; அதில்தான் இஸ்லாத்தின் கண்ணியம் உள்ளது" என்று கூறினார்கள்.

எனவே, ஏகத்துவத்தின் தூதுச்செய்தியை எட்ட வைப்பதற்கும், அதனை நமது வாழ்க்கையின் அங்கமாக ஆக்கிக் கொள்வதற்கும் முழுமையான முயற்சி செய்யப்பட வேண்டும். இதுவே இன்று முஹம்மதிய மஸீஹின் ஊழியர்களாகிய நமது பணியாகும். இப்பணியைச் நிறைவேற்ற அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பு வழங்குவானாக. ஆமீன்.

***குத்பாவின் இறுதியில், ஹுஸூர் அவர்கள் உலகின் தற்போதைய சூழ்நிலைகளுக்காகவும், முஸ்லிம் உம்மத்திற்காகவும் துஆ செய்யுமாறு கவனமூட்டினார்கள்.***

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلاَ مُضِلَّ لَهُ وَمَنْ يُّضْلِلْهُ فَلاَ هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَآ اِلٰهَ اِلاَّ اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)